**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**In the Court of District Munsif cum Judicial Magistrate, Tharangambadi**

**Crl. M.P. No. 515/2026**

**Deposition of Defacto Complainant** **Dt. 20.07.2026**

| | |
|---|---|
| Name | ராஜேந்திரன் |
| Father's Name | பெரியகருப்பன் |
| Village | படுகை, மாத்துார் |
| Taluk | தரங்கம்பாடி |
| Age | 62/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day 20.07.2026

**விசாரணை**:–

என் பெயர் ராஜேந்திரன். என் தந்தையின் பெயர் பெரியகருப்பன். இந்த வழக்கில் புகார் மனுவில் உள்ளது என்னுடைய கையொப்பம் தான். கடந்த 11.12.2015 அன்று காலை 10.00 மணியளவில் மாத்துார் ஊராட்சி மன்ற அலுவலகம் அருகில் சர்வீஸ் சென்டர் கட்டிடம் கட்டியதை தடுத்து எதிரிகள் குரு (எ) குருமூர்த்தி, ஜோதி ஆகியோர் என்னை கொச்சை வார்த்தைகளால் திட்டி இரும்பு கம்பியால் தாக்கி கொலைமிரட்டல் விடுத்தது தொடர்பாக செம்பனார்கோவில் காவல் நிலையத்தில் புகார் கொடுத்து, புகாரின் அடிப்படையில் செம்பனார்கோவில் காவல் நிலைய குற்ற எண். 443/2015, இதச பிரிவு 294(b), 448, 323, 506(2)ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார்கள். இந்நிலையில் மேற்படி வழக்கின் புலன் விசாரணை நீண்ட காலம் நிலுவையில் இருந்து வந்த நிலையில் தற்போது வரை போலிசார் இறுதி அறிக்கை தாக்கல் செய்யவில்லை என்றும், இனிமேல் விசாரணை மேற்கொள்ள சாத்தியம் இல்லை என்ற அடிப்படையில் வழக்கின் மேல்நடவடிக்கை நிறுத்தம் செய்வதற்கான அறிவிப்பை பெற்றேன். மேற்படி குற்ற எண். 443/2015, இதச பிரிவு 294(b), 448, 323, 506(2)ன் கீழான முதல் தகவல் அறிக்கையின் பெயரிலான மேல் நடவடிக்கை நிறுத்தம் செய்ததில் எனக்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லை. அதன் அடிப்படையில் மேற்படி முதல் தகவல் அறிக்கையை முடித்து வைக்க சம்மதிக்கிறேன்.

**விசாரணை முடித்துக்கொள்ளப்பட்டது.**